# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 40/ந/2026, நாள் 29.07.2026**

எம். அருள்மொழி,
அய்யம்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பழனி நகராட்சி, திண்டுக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், அய்யம்பேட்டை அஞ்சல், முத்தியால்பேட்டை, கவரைத்தெரு, கொபேஷா பிளாட்ஸ், எண். A/3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எம். அருள்மொழி என்பவரது 24.11.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2025 அன்று பெறப்பட்டு, 40/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

காஞ்சிபுரம் மாவட்டம், அய்யம்பேட்டை அஞ்சல், முத்தியால்பேட்டை, கவரைத்தெரு, கொபேஷா பிளாட்ஸ், எண். A/3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எம். அருள்மொழி என்பவரின் 24.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்கள் தெரிவித்துள்ளார்:

"நான் பழநி நகராட்சியில் உதவி வருவாய் அலுவலராக 28.11.2024 அன்று பணியில் சேர்ந்து இரண்டு மாதங்கள் பணிபுரிந்து 31.01.2025ல் பணி ஓய்வு பெற்று 11 மாதங்கள் கடந்தும் எனக்கு வழங்க வேண்டிய பணிமாறுதல் பயணப்பட்டியல் (TTA Bill) ரூ.5,085/– மற்றும் அகவிலைப்படி உயர்வு நிலைவைத் (DA Arrear) தொகை ரூ.14,568/– ஆக மொத்தம் ரூ.19,653/– வழங்கப்படவில்லை. இத்தொகையினை வழங்கக் கேட்டு பல கோரிக்கை கடிதங்கள் ஆணையர், பழநி நகராட்சிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பியும் மற்றும் ஆணையர் பழநி நகராட்சி அவர்களிடம் கைபேசி மூலம் பலமுறை தொடர்பு கொண்டும், இதுநாள் வரை தொகை வழங்கப்படவில்லை. மன உளைச்சலுக்கு ஆளாகிய நான் இதுகுறித்து உரிய விசாரணை மேற்கொண்டு நீதி வழங்கக்கோரி தங்களுக்கு முறையீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களின் கடிதம் எண்.1837/ந/2024 நாள்19.11.2025ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் மேற்படி முறையீடு தொடர்பாக படிவம் 1ஐ பூர்த்தி செய்து முறைப்படி அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி புகார் மனு தொடர்பாக படிவம் – 1ஐ பூர்த்தி செய்து, எனது புகார் கோரிக்கை மனுவின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவரின், மனநிலை, காலவிரயம், செலவினங்களை கருத்தில் கொண்டு மேற்படி தொகையினை வழங்கத்தக்க

வகையில் ஆணையர், பழநி நகராட்சி அவர்களுக்கு உத்தரவு வழங்கக்கோரி கோரிக்கை மனுவினை மீள பணிந்து அனுப்பிவைக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பழநி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. இருப்பினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையர் ஆகியோரை 12.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 12.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.605/2026/பி3, நாள் 05.06.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"திரு. எம். அருள்மொழி, உதவி வருவாய் அலுவலர் (ஓய்வு) அவர்கள் தாராபுரம் நகராட்சியில் கணக்கராக பணிபுரிந்து வந்த நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவின்படி பழநி நகராட்சிக்கு உதவி வருவாய் அலுவலராக பணியிட மாறுதல் செய்யப்பட்டு பணிபுரிந்து 31.01.2025 அன்று பணி ஓய்வு பெற்றார்.

திரு. எம். அருள்மொழி, உதவி வருவாய் அலுவலர் (ஓய்வு) அவர்களின் 22.01.2026ல் நாளிட்ட விண்ணப்பத்தின்படி தனியர் வழங்கக்கோரிய பணிமாறுதல் பயணப் பட்டியல், அகவிலைப்படி உயர்வு மற்றும் இதர நிலுவை தொகை விவரம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | விபரம் | காசோலை விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.எம். அருள்மொழி உதவி வருவாய் அலுவலர் (ஓய்வு) | அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை | 605180, 20.11.2025 | ரூ.14,568/– |
| | | பணிமாறுதல் பயணப் பட்டியல் | 605071, 24.02.2026 | ரூ.5,085/– |
| மொத்தம் | | | | ரூ.19,653/– |

மேற்கண்ட விபரப்படி தனியருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டது. வழங்க வேண்டிய நிலுவை எதுவும் இல்லை என்ற விவரத்தினை இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் 12.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"பழநி நகராட்சியில் உதவி வருவாய் அலுவலராக 28.11.2024 அன்று பணியில் சேர்ந்து 2 மாதங்கள் பணிபுரிந்து 31.01.2025ல் பணி ஓய்வு பெற்று 11 மாதங்கள் ஆகியும் எனக்கு வழங்க வேண்டிய பணிமாறுதல் பயணப்படி (TTA bill) ரூ.5,085/–, 05.03.2026 அன்றும் அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை (DA arrears) தொகை ரூ.14,568/– 02.12.2025 அன்றும் ஆக மொத்தம் ரூ. 19,653/– மிகுந்த கால தாமதத்துடன் வழங்கப்பட்டது.

நான் மேற்படி இரு தொகைகளையும் பெற கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலம் தொடர்ச்சியாக பல பதிவு கடிதங்கள் அனுப்பப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட பல பதிவு அஞ்சல் கடிதங்களில், நான்கு பதிவஞ்சல் கடிதங்கள் வாங்க மறுத்து (Refused) திருப்பப்பட்டுள்ளது. நேரடியாகவும் பழநி நகராட்சி ஆணையரை தொடர்பு கொண்ட பின்னர் தான் மேற்படி தொகை கிடைக்கப்பெற்றது. பல பதிவஞ்சல் கடிதங்களுக்கு பதில் அனுப்பாதது, அதற்கான செலவினங்களால் ஏற்பட்ட மன உளைச்சலை கருத்தில் கொண்டு இனிவரும் காலங்களில் இத்தகைய சூழ்நிலை உருவாகாமல் இருக்க உரிய உத்திரவினை வழங்கிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

7. எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையர் 12.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் தனக்கு 1 ½ ஆண்டுகள் முயற்சிக்கு பின் தாமதமாக தான் மேற்படி தொகை வழங்கப்பட்டது எனவும், தனது 4 தபால்கள் திரும்ப வரப்பெற்றுள்ளது எனவும் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் எடுப்பதில்லை எனவும் விசாரணையின் போது புகாராக தெரிவித்தார். அவ்வாறு நடந்திருப்பின் அது வருந்த தக்கது.

நான் பழநி நகராட்சி ஆணையராக 6 மாதங்களுக்கு முன்னர்தான் பணியில் சேர்ந்தேன். பின்னர் மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு மனுதாரருக்கு அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை (காசோலை எண்.605180/20.11.2025) ரூ.14,568/–ம், பணிமாறுதல் பயணப்படி (காசோலை எண்.605071/24.02.2026) ரூ.5,085/–ம் ஆக மொத்தம் ரூ.19,653/– (ரூபாய் பத்தொன்பதாயிரத்து அறுநூற்றி ஐம்பத்தி மூன்று மட்டும்) வழங்கப்பட்டது. மேற்படி தொகை வழங்குதலில் ஏற்பட்ட காலதாமதம் ஊழியர் பற்றாக் குறையால் ஏற்பட்டது என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”.

8. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் 28.11.2024 அன்று பழநி நகராட்சியில் உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்து 31.01.2025ல் பணி ஓய்வு பெற்றுள்ளார் என்பதும், பணிமாறுதல் பயணப்பட்டியல் (TTA Bill) தொகை ரூ.5,085/– மற்றும் அகவிலைப்படி உயர்வு நிலைவைத் (DA Arrear) தொகை ரூ.14,568/– ஆக மொத்தம் ரூ.19,653/– ஒன்றரை ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல பதிவு கடிதங்கள் அனுப்பப்பட்டும் வழங்கப்படவில்லை என்பதும், பழநி நகராட்சி ஆணையரை தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து மேற்படித் தொகை ரூ. 19,653/– வழங்கப்பட்டுள்ளது என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

எதிர்மனுதாரர் பழநி நகராட்சி ஆணையராக ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் பணியில் சேர்ந்துள்ளார் என்பதும், மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு மனுதாரருக்கு வழங்கவேண்டிய அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை ரூ.14,568/– காசோலை எண்.605180, நாள் 20.11.2025ம், பணிமாறுதல் பயணப்பட்டியல் தொகை ரூ.5,085/– காசோலை எண்.605071, நாள் 24.02.2026ம் பழநி நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது என்பதும், பணியாளர்களின் பற்றாகுறைவால் மேற்படி தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை முழுவதும் வழங்கப்பட்டு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாலும், பணியாளர்களின் பற்றாகுறைவால் மேற்படித் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்ற ஆணையரின் கூற்றை ஏற்று, இனிவருங்காலங்களில் இதுபோன்று தாமதிக்காமல் இம்மாதிரியான இனங்களில் சிறப்பு கவனம் செலுத்தி உரிய நடமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பழனி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி, இப்பொருள் தொடர்பான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 29–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. எம். அருள்மொழி,
உதவி வருவாய் அலுவலர் (ஓய்வு)
எண். A/3, கொபேஷா பிளாட்ஸ்,
கவரைத்தெரு, முத்தியால்பேட்டை,
அய்யம்பேட்டை அஞ்சல் – 631 601,
காஞ்சிபுரம் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
பழநி நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

30/7/26
செயலாளர்.